செய்தி வெளியீடு எண். 110 நாள். 21.02.2018

# தமிழ்நாடு நகர்ப்புற சாலை மேம்பாட்டுத் திட்டம் மற்றும் 14-வது மத்திய நிதிக்குழு திட்டத்தின் கீழ் 67 சாலைகள் ரூ.19 கோடியே 71 இலட்சம் மதிப்பிலான பணிகளை மாண்புமிகு தமிழ்ஆட்சி மொழி, கலைபண்பாடு மற்றும் தொல்லியல்துறை அமைச்சர் திரு.க.பாண்டியராஜன் அவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., ஆகியோர் அடிக்கல் எடுத்து வைத்து துவக்கி வைத்தார்கள்

திருவள்ளூர் மாவட்டம், ஆவடி நகராட்சி, சின்னம்மன் கோயில் தெருவில் தமிழ்நாடு நகர்ப்புற சாலை மேம்பாட்டுத் திட்டம் மற்றும் 14-வது மத்திய நிதிக்குழு திட்டத்தின் கீழ் 67 சாலைகள் ரூ.19 கோடியே 71 இலட்சம் மதிப்பிலான பணிகளை மாண்புமிகு தமிழ்ஆட்சி மொழி, கலைபண்பாடு மற்றும் தொல்லியல்துறை அமைச்சர் திரு.க.பாண்டியராஜன் அவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., ஆகியோர் இன்று (21.02.2018) அடிக்கல் எடுத்து வைத்து துவக்கி வைத்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்ஆட்சி மொழி, கலைபண்பாடு மற்றும் தொல்லியல்துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் கூறியதாவது :

ஆவடி பெருநகராட்சியானது 65 சதுர கி.மீ. பரப்பளவில் 48 வார்டுகளை கொண்டது நகரில் மொத்தம் 2467 தெருக்கள் உள்ளது. இந்நகரில் ரூ.158.05 கோடி மதிப்பீட்டில் பாதாள சாக்கடை திட்டம் மற்றும் ரூ.103.84 கோடி மதிப்பீட்டில் குடிநீர் அபிவிருத்தி பணிகள் தற்போது முடிவடைந்து வீட்டு இணைப்பு வழங்கப்பட்டு வருகிறது. அவ்வாறு பாதாள சாக்கடை திட்டம் மற்றும் குடிநீர் அபிவிருத்தி திட்டத்திற்காக பைப்லைன் அமைக்க சாலைகளை தோண்டி பணிகள் மேற்கொள்ளும்போது அனைத்து தெருக்களும் சேதமடைந்து பொது மக்கள் செல்வதற்கு கடினமாக இருக்கிறது. அவ்வாறு சேதமடைந்து சாலைகளில் 50% ஏற்கனவே அமைக்கப்பட்டு பொது மக்கள் பயன்பாட்டில் உள்ளது. தற்போது தமிழ்நாடு நகர்புற சாலை மேம்பாட்டு திட்டம் 2017-18-ன் கீழ் ரூ.15 கோடி மதிப்பீட்டில் 23.61 கி.மீ. நீளத்திற்கு மதிப்பீடு செய்யப்பட்டு 27 எண்ணிக்கை தார்சாலை மற்றும் 19 எண்ணிக்கை சிமெண்ட் சாலைகள் மொத்தம் 46 சாலைகளும் மற்றும் 14-வது மத்திய நிதிக்குழு 2017-18-ன் கீழ் 6.09 கி.மீ. நீளத்திற்கு ரூ. 4.71 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு 6 எண்ணிக்கை தார் சாலைகளும் மற்றும் 15 எண்ணிக்கை சிமெண்ட் சாலைகளும் மொத்தம் 21 சாலைகள் ஆக மொத்தம் 67 சாலை பணிகள் ரூ.19 கோடியே 71 இலட்சம் மதிப்பில் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வாறு மாண்புமிகு தமிழ்ஆட்சி மொழி, கலைபண்பாடு மற்றும் தொல்லியல்துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.வி.அலெக்சாண்டர், திருவள்ளூர் வருவாய் கோட்டாட்சியர் திருமதி.கெ.ரா.திவ்யஶ்ரீ, ஆவடி நகராட்சி ஆணையர் திரு.மதிவாணன், ஆவடி வட்டாட்சியர் திரு.மதன் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**